⟨individual⟩

**கரூர் மாவட்ட கருவூல அலுவலரின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை: திரு.கஇரவிச்சந்திரன், M.Sc.,B.Ed.,**

3/12/19

ந.க. எண்:5216/ 2019 /அ1 நாள்:27.11.2019

சார்நிலைக் கருவூலம்
3 DEC 2019

| | | | |
|---|---|---|---|
| பொருள் | : | பணியமைப்பு - கருவூல கணக்குத்துறை- கரூர் மாவட்ட கருவூலஅலகு - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பணிக்கான 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆம் ஆண்டிற்குரிய ஒருங்கிணைந்த போட்டித்தேர்வு - கரூர் மாவட்டக் கருவூல அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பணிநியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்து – ஆணையிடல் - தொடர்பாக. | |
| பார்வை | : | 1. | செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 கடித எண்.1149/PSD-H2/2019 நாள்:18.02.19 |
| | | 2. | முதன்மைச் செயலர்/ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை அவர்களின் செ.மு.ஆ.ந.க.எண்.7107/2019/சி3 நாள்:05.03.2019 |
| | | 3. | கருவூல அலுவலர், கரூர் அவர்களது செயல்முறை ஆணைகள் ந.க.1167/2019/அ1 நாள்:08.03.2019. |
| | | 4. | உதவி கருவூல அலுவலர், சார்நிலைக் கருவூலம்,அரவக்குறிச்சி கடித ந.க.எண்.407/2019/அ நாள்:08.03.2019 |
| | | 5. | உதவி கருவூல அலுவலர், சார்நிலைக் கருவூலம்,அரவக்குறிச்சி கடித ந.க.எண்.1945/2019/அ நாள்:25.11.2019 |

ooOoo

**ஆணை:-**

பார்வை 1 மற்றும் 2 ல் காணும் கடிதங்களின் வாயிலாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பணிகளுக்கான 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆம் ஆண்டிற்குரிய ஒருங்கிணைந்த போட்டித்தேர்வில் தேர்ச்சிப் பெற்று, தமிழ்நாடு அமைச்சுப்பணிகளில் இளநிலை உதவியாளராக கருவூலக் கணக்குத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3 ல் காணும் செயல்முறை ஆணையின் மூலம் பணிநியமனம் வழங்கப்பட்ட கீழ்க்கண்ட பணியாளரின் பணியினை தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொதுவிதி 23(ஏ)யின் படி தனியர் இளநிலை உதவியாளராக முறையாக பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி (திருமதி) | பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | ம.அன்புமணி, இளநிலை உதவியாளர் | சார்நிலைக் கருவூலம், அரவக்குறிச்சி | 08.03.2019 மு.ப | 08.03.2019 மு.ப |

2) மேலும், இந்த பணிவரன் முறை சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக்கிளை ஆகியவற்றில் இந்த பணி அமர்வு சம்மந்தமாக நிலுவையில் உள்ள வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டது

3) மேற்கண்ட பணியாளர்கள் பணிவரன் முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் இரண்டாண்டுகாலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்கள்.

4) மேலும்,மேற்கண்ட பணியாளர்கள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு அதன் முடிவில் நடத்தப்படும் தேர்வுகள் அனைத்திலும் தேர்ச்சி பெறவேண்டும், அவ்வாறு தேர்ச்சிப் பெற்ற பின்னரே தொடர்புடைய பணியாளர்களுக்கு தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான ஆணைகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

27/11/19

கருவூல அலுவலர்,
கரூர்.

27.11.19

பெறுநர்
திருமதி.ம.அன்புமணி,
இளநிலை உதவியாளர்,
சார்நிலைக் கருவூலம்,
அரவக்குறிச்சி.

நகல்:

1).உதவி கருவூல அலுவலர், சார் கருவூலம், அரவக்குறிச்சி அவர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2).அ -1 / இருப்பு கோப்பிற்கு.

3).பணிப்பதிவேட்டிற்கு.